## 24.3 ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களுக்கு மானியம் வழங்குதல்

ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி (இ5) துறை

அரசாணை (பத்தாண்டுகள்) எண்.156 நாள் : 28.3.2007

படிக்க :

1. அரசாணை(1ப) எண். 645, (ஊ.வ.(ம) ஊ.) துறை, நாள் 7.11.05
2. இயக்குநர், ஊ.வ.(ம) ப. ராஜ் இயக்குநர் கடித எண். 19571/2006, பார அ 3.1. நாள் 15.3.07.

**ஆணை**

பார்வை 1ல் படிக்கப்பட்ட அரசாணையில் 2006–2007 நிதியாண்டு வரவு–செலவு திட்ட மதிப்பீட்டில் (Budget Estimate) கோரிக்கை எண். 42ல் உள்ளாட்சி மன்றங்களின் மருந்தகங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பராமரிப்பு மான்யம் ரூ. 5,73,000–ஐ அனுமதித்து ஆணை வெளியிடப்பட்டது.

2. 110 பகுதிநேர ஊரக மருந்தகங்களுக்கு ஆண்டு மான்யமாக ரூ. 2040/– வீதம் ரூ. 2,24,400/–ம், 87 முழுநேர மருந்தகங்களுக்கு மான்யமாக ரூ. 5400/– வீதம் ரூ. 4,69,800/– ஆகவும் மொத்தம் ரூ.6,94,200/– தேவைப்படுகிறது என்றும், மான்ய கோரிக்கை எண். 42, ஊரக வளர்ச்சித் துறை, 2006–07ல் திருத்திய மதிப்பீட்டில் (Revised Estimate) ரூ. 6,94,000/– நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும் எனவே, ஏற்கனவே விடுவிக்கப்பட்ட தொகை ரூ. 5,73,000/– போக மீதமுள்ள தொகை ரூ. 1,21,000/–யை விடுவிக்குமாறு பார்வை 2–ல் படிக்கப்பட்ட கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் இயக்குநர் அரசிடம் கோரி உள்ளார்.

3. ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் இயக்குநரின் செயற்குறிப்பினை, அரசு கவனமாக ஆய்வு செய்து, அவரது செயற்குறிப்பை ஏற்று ரூ. 1,21,000/–(ரூபாய் ஒரு இலட்சத்து இருபத்தொன்றாயிரம் மட்டும்) ஒப்பளித்து அரசு ஆணையிடுகிறது.

| | |
|---|---|
| உள்ளாட்சி மன்றங்களின் மருந்தகங்களுக்குப் பராமரிப்பு மான்யம் | ரூ. 1,21,000/– |
| மொத்தம் | ரூ. 1,21,000/– |

4. மேலே பத்தி3–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்.

| | | |
|---|---|---|
| 2210 | – | மருத்துவமும் பொது சுகாதாரமும் |
| 03 | – | ஊரக சுகாதாரப் பணிகள் – ஆங்கிலமுறை மருத்துவம். |
| 110 | – | மருத்துவமனைகளும், மருந்தகங்களும் |
| I | – | திட்டத்தில் சேராதது |
| BS | – | உள்ளாட்சி மன்றங்களின் மருந்தகங்களுக்குப் பராமரிப்பு மானியம் |
| 09 | – | உதவி மானியங்கள் |
| 01 | – | நடப்புச் செலவுக்கான மானியங்கள் |

(து. தொ.கு.எண். 2210–03–110–BS–0910)

5. மேலே ஒப்பளிக்கப்பட்டுள்ள உள்ளாட்சி மன்றங்களின் மருந்தகங்களுக்கான மானியத் தொகையைப் பெற்று அனைத்து மாவட்டங்களுக்கும் (சென்னை நீங்கலாக) பிரித்து வழங்க இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

6. இவ்வாணை நிதித்துறையின் இசைவுடன் அ.சா.கு எண். 19367/நிதி(ஊ.வ)/ நாள் 26.3.2007–ல் தெரிவித்துள்ள ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க. அஷோக் வர்தன் ஷெட்டி**
அரசு செயலாளர்